31st March 1964]

திரு. பி. கே. மூக்கையா தேவர் : ஸார், அகதிகள் என்று சொல்லுகிறபோது கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வருகிறவர்கள் மட்டும்தான் அகதிகளா? சிலோன், மலேயா போன்ற பகுதிகளிலிருந்து விரட்டப்பட்ட தமிழர்கள் வருகிறார்களே அவர்கள் அகதிகளாகக் கருதப்படுவதில்லையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போது மத்திய சர்க்காரிலிருந்து வந்திருக்கிற கோரிக்கை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கு ஏதாவது நம் நாட்டில் உதவி செய்யவேண்டும், எந்த இடத்தில் ரீஹாபிலிடேட் செய்ய முடியும் என்பதைப் பற்றிய கோரிக்கைதான். மற்றபடி இலங்கை, மலேயா போன்ற இடங்களிலிருந்து வருகிறவர்களைப் பற்றி தனிக் கேள்வி போட்டால் என்ன உதவி செய்ய முடியும் என்று பார்த்துச் சொல்லலாம்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் அகதிகளைப் பராமரிக்க ஆகும் செலவிற்காக மத்திய சர்க்கார் மாகாண சர்க்காருக்கு ஏதாவது மான்யம் கொடுக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தச் செலவுகளை மத்திய சர்க்கார் முழுதும் ஏற்றுக்கொள்ளும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகள் பூர்வீகமாக எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று அறியலாமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களெல்லாம் ஒரு காலத்தில் நம்முடைய நாட்டுப் பிரஜைகளாக, வங்காளத்தின் பிரஜைகளாக இருந்தவர்கள். பாகிஸ்தான் பிரிவினையினால் பாகிஸ்தான் பிரஜைகளாக மாறினார்கள். அந்தப் பிரதேசத்தில் இவர்கள் சிறுபான்மையோர்—மைனாரிட்டீஸ். அங்கிருந்து விரட்டி அடிக்கப்படுகிறார்கள். ஆகையால் அங்கிருந்து நம் நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

Rebate on sale of handloom cloth

* 448 *Q.*—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that some Weavers' Co-operative Societies in Ramanathapuram district have made fraudulent claims for rebate on the sale of handloom cloth during 1957–59 to the tune of several lakhs of rupees;

(*b*) if so, the names of these societies and the nature of the irregularities committed:

(*c*) whether the Government have taken any action on the cases reported by the Registrar of Co-operative Societies; and

(*d*) if so, the details thereof?

[31st March 1964

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) to (*d*) A statement[a] is placed on the Table of the House.

திரு. கரு. சீமைச்சாமி : இந்தமாதிரி மோசடி செய்த கூட்டுறவு சங்கங்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைத்தான் இந்த ஸ்டேட்மெண்டில் எலாபரேட்டாக எழுதி வைத்திருக்கிறோம். மோசடி நடக்கவில்லை. நடப்பதற்கு முன்னால் தடுத்து விட்டோம். அதைத்தான் கனம் அங்கத்தினர் புரிந்துகொள்ளவேண்டும். அவர்களெல்லாம் தவறான, ஃபால்ஸ் ரிபேட் க்ளெயிம் போட்டார்கள். நாம் அவைகளை அனுமதிக்கவில்லை. நாம் கொடுத்திருந்தால் அப்போது அது மோசடி, மோசடி நடந்து விட்டது என்று சொல்லலாம். ஆனால் நாம் கொடுக்கவில்லை. உடனடியாக பரிசீலனை செய்து நிறுத்திவிட்டோம்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தமாதிரி அவர்கள் ஃபால்ஸ் க்ளெயிம் செய்ததை ஏதாவது புகார் வந்ததன் மீது பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அல்லது சர்க்கார் தணிக்கை முறையிலே அது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏதோ ஒரு நாள் அசெம்பிளியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது ரிபேட் க்ளெயிமைப் பார்த்துக்கொண்டிருந்தேன். திடீரென்று ராமநாதபுரத்திலும், இன்னும் இரண்டு பகுதிகளிலும் விற்பனை ஆகிற அளவுக்கு அதிகமாக ரிபேட் வந்த மாதிரி தெரிந்தது. அதை மார்க் பண்ணி நிர்வாக அதிகாரிகள் இதைப் பற்றிப் பரிசீலனை செய்யவேண்டுமென்று எழுதி அனுப்பினேன். இந்த முறையில் நான்தான் முதலில் இதைக் கண்டுபிடித்தது. தணிக்கையெல்லாம் பின்னால் தான் நடந்தது.

* 449 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the results of investigation into the alleged fraudulent claims for rebate on the sale of handloom cloth by Weavers' Co-operative Societies in Tirunelveli district have been received; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A statement[b] explaining the position is placed on the Table of the House.

அக்கினி ஆற்றில் அணை கட்டுதல்

* 451 கேள்வி—திரு. பி. முருகையன் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

---

a Printed as Appendix I on pages 842–847.
b Printed as Appendix II on pages 847–849.